தற்போது கோயில் திருப்பணிகள் செய்ய சுமார் ரூ.20 இலட்சம் வரை செலவாகும். திருக்கோயிலைச் சுற்றிலும் பின்தங்கிய வகுப்பினர் அதிகம் வசிக்கின்றனர். இருப்பினும் அருகில் உள்ள நகர்ப்பகுதியில் வசிக்கும் ஆன்மீகத்தில் பற்றுள்ள செல்வந்தர்களை அணுகி திருப்பணிக் குழு அமைத்து நிதி ஆதாரம் பெருக்கி, நிதி ஆதாரத்தின் அடிப்படையில் விரைவில் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்த இந்த அரசு முயற்சிக்கும் என்பதைத் தங்கள் மூலமாக பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நடவடிக்கைகளுக்காக எங்கள் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல அந்தப் பகுதிகளிலுள்ள எல்லா விவசாயிகளும் கட்டாயமாக இந்த மீட்டர் கட்டணத்தை....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

6—

சுகாதார நிலையங்கள்

***9849—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டேனிடா திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் துணை சுகாதார நிலையங்கள் பல கட்டி முடிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை விரைவில் கட்டி முடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

2003 ஜனவரி 28]

(ஆ) டேனிடா திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் 2001 மார்ச் வரை கட்டி முடிக்கப்படாமல் இருந்த 169 துணை சுகாதார நிலையங்களை, மாவட்ட ஆட்சியரின் நேரடி மேற்பார்வையில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாகக் கட்டி முடிக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக 5 துணை சுகாதார நிலையங்கள் தவிர தற்போது அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. அந்த 5 சுகாதார துணை நிலையங்களும் இந்த ஆண்டு மார்ச் இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்ட ஏழை எளிய மக்களின் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீரமைக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்திற்கான ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதற்காக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாகவும், எங்களின் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

அடுத்ததாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் முதல் கேள்விக்கு மகிழ்ச்சியான பதிலைக் கூறியிருக்கிறார். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் எல்லா நிலைகளிலும் தொடர்ந்து பின்தங்கியிருக்கின்ற வறட்சியான மாவட்டம். இந்தப் பின்தங்கிய மாவட்டத்தினுடைய கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மக்கள் சுகாதார வசதியைப் பெறுவதற்காக எல்லா கிராமங்களிலும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுமா? இப்போது 169 துணை சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்க ஆவன செய்யப்பட்டு 5 நிலுவையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது முடிந்த பிறகு அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய எல்லா கிராமங்களுக்கும் துணை சுகாதார

நிலையங்கள் கட்டி முடிக்கப்படுமா என்பதையும், இத்திட்டத்தை அரசு விரைவாக அமல் நடத்துமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு உத்தேசித்து அந்த அடிப்படையிலே துணை சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட துணை சுகாதார நிலையங்கள் தவிர இன்னும் 32 துணை சுகாதார நிலையங்கள்தான் தருமபுரி மாவட்டத்திலே கட்டப்பட இருக்கின்றன. அவையும் மிக விரைவிலே கட்டி முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7. திரு. பி.கே. சேகர்பாபு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

7—

மருத்துவமனையில் பயிற்சி

•18465—திரு. பி.கே. சேகர்பாபு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1993 ஆம் ஆண்டு, தொற்றுநோய் மருத்துவமனையில் ஏழை எளிய மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்ட பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சி மற்றும் செவிலியர் உதவியாளர்களுக்கான பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையிலே தொடங்கப்பட்ட அந்தப் பயிற்சித் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. அது தொடருவதற்கான வாய்ப்பு இல்லை.